

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 6. நீத்தல் விண்ணப்பம்

(உத்தரகோசமங்கையில் அருளியது)

பிரபஞ்ச வைராக்கியம்

(கட்டளைக் கலித்துறை)





# திருச்சிற்றம்பலம்

கடையவ னேனைக் கருணையினால்
கலந்து ஆண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே 1





கொள்ளேர் பிளவுஅகலாத் தடங்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதிகண்டாய் s
நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறம்அல்லேன் உத்தர
கோசமங்கைக்கு அரசே
கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்டு
ஆண்டது எக்காரணமே.





கார்உறு கண்ணியர் ஐம்புலன்
ஆற்றங் கரைமரமாய்
வேர்உறுவேனை விடுதிகண்டாய்
விளங்குந் திருவா
ரூர்உறைவாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
வார்உறு பூண்முலையாள் பங்க
என்னை வளர்ப்பவனே.





வளர்கின்ற நின் கருணைக்கையில் மய

வாங்கவும் நீங்கி இப்பால்

மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய்

வெண்மதிக் கொழுந்து ஒன்று

ஒளிர்கின்ற நீண்முடி உத்தர

கோசமங்கைக்கு அரசே

தெளிகின்ற பொன்னும் மின்னும்அன்ன

தோற்றச் செழுஞ்சுடரே.

4





செழிகின்ற தீப்புகு விட்டிலின்
சின் மொழியாரில் பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண்டாய்
வெறி வாய்அறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர
கோசமங்கைக்கு அரசே
வழிநின்று நின் அருளார் அமுது
ஊட்ட மறுத்தனனே.





மறுத்தனன் யான்உன் அருள்
அறியாமையின்என் மணியே
வெறுத்துஎனைநீ விட்டிடுதி கண்டாய்
வினையின் தொகுதி
ஒறுத்துஎனை ஆண்டுகொள் உத்தர
கோசமங்கைக்கு அரசே
பொறுப்பர் அன்றே பெரியோர்
சிறுநாய்கள்தம் பொய்யினையே.

6





பொய்யவனேனைப் பொருள் என
ஆண்டுஒன்று பொத்திக்கொண்ட
மெய்யவனே விட்டிடுதி கண்டாய்
விடம் உண்மிடற்று
மையவனே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
செய்யவனே சிவனே சிறியேன்
பவம் தீர்ப்பவனே.





தீர்க்கின்றவாறு என் பிழையை
நின்சீர் அருள் என்கொல் என்று
வேர்க்கின்ற என்னை விடுதிகண்டாய்
விரவார் வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தர
கோசமங்கைக்கு அரசே
ஈர்க்கின்ற அஞ்சொடு அச்சம்
வினையேனை இருதலையே

8





இருதலைக் கொள்ளியினுள் எறும்பு
ஒத்து நினைப்பிரிந்த
விரிதலையேனை விடுதி கண்டாய்
வியன் மூஉலகுக்கு
ஒருதலைவா மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
பொருதலை மூஇலைவேல் வலன்
ஏந்திப் பொலிபவனே

9





பொலிகின்ற நின்தாள் புகுதப் பெற்று
ஆக்கையைப் போக்கப் பெற்று
மெலிகின்ற என்னை விடுதி கண்டாய்
அளிதேர் விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தர
கோசமங்கைக்கு அரசே
வலிநின்ற திண் சிலையால்
எரித்தாய் புரம் மாறுபட்டே

10





மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப
யான்உன் மணிமலர்த்தாள்
வேறுபட்டேனை விடுதி கண்டாய்
வினையேன் மனத்தே
ஊறும் மட்டே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
நீறுபட்டே ஒளி காட்டும்
பொன்மேனி நெடுந்தகையே 11





நெடுந்தகை நீஎன்னை ஆட்கொள்ள
யான் ஐம்புலன்கள் கொண்டு
விடுந்தகையேனை விடுதி கண்டாய்
விரவார் வெருவ
அடுந்தகை வேல்வல்ல உத்தர
கோசமங்கைக்கு அரசே
கடுந்தகையேன் உண்ணுந் தெண்ணீர்
அமுதப் பெருங்கடலே





கடலினுள் நாய் நக்கி ஆங்கு உன்
கருணைக் கடலின் உள்ளம்
விடல் அரியேனை விடுதி கண்டாய்
விடல் இல் அடியார்
உடல் இலமே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
மடலின் மட்டே மணியே அமுதே
என்மது வெள்ளமே





வெள்ளத்துள் நாவற்றி ஆங்குஉன்
அருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்
விரும்பும் அடியார்
உள்ளத்து உள்ளாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
கள்ளத்து உளேற்கு அருளாய்
களியாத களி எனக்கே





களிவந்த சிந்தையொடு உன்கழல்
கண்டும் கலந்தருள
வெளிவந்திலேனை விடுதி கண்டாய்
மெய்ச் சுடருக்கு எல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர
கோசமங்கைக்கு அரசே
எளிவந்த எந்தைபிரான் என்னை
ஆளுடை என் அப்பனே





என்னை அப்பா அஞ்சல் என்பவரின்றி
நின்று எய்த்து அலைந்தேன்
மின்னை ஒப்பாய் விட்டிடுதி கண்டாய்
உவமிக்கின் மெய்யே
உன்னை ஒப்பாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய்
என் அரும் பொருளே





பொருளே தமியேன் புகல் இடமே
நின்புகழ் இகழ்வார்
வெருளே எனை விட்டிடுதி கண்டாய்
மெய்ம்மையார் விழுங்கும்
அருளே அணிபொழில் உத்தர
கோசமங்கைக்கு அரசே
இருளே வெளியே இகபரம்
ஆகி இருந்தவனே





இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை என்னின் அல்லால்
விருந்தினனேனை விடுதி கண்டாய்
மிக்க நஞ்சு அமுதா
அருந்தினனே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
மருந்தினனே பிறவிப் பிணிப்
பட்டு மடங்கினர்க்கே

18





மடங்களன் வல்வினைக் காட்டை

நின்மன் அருள் தீக்கொளுவும்

விடங்க என்தன்னை விடுதிகண்டாய்

என் பிறவியை

வேரொடும் களைந்து ஆண்டுகொள் உத்தர

கோசமங்கைக்கு அரசே

கொடுங்கரிக்குன்று உரித்து அஞ்சுவித்தாய்

வஞ்சிக் கொம்பினையே





கொம்பர் இல்லாக் கொடிபோல்

அலமந்தனன் கோமளமே

வெம்புகின்றேனை விடுதிகண்டாய்

விண்ணர் நண்ணுகில்லா

உம்பர் உள்ளாய் மன்னும் உத்தர

கோசமங்கைக்கு அரசே

அம்பரமே நிலனே அனல்

காலொடு அப்பு ஆனவனே





ஆனைவெம் போரில் குறுந்தூறு
எனப்புலனால் அலைப்புண்
டேனை எந்தாய் விட்டிடுதி கண்டாய்
வினையேன் மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலையும்
அமுதத்தையும் ஒத்து
ஊனையும் என்பினையும் உருக்
காநின்ற ஒண்மையனே





ஒண்மையனே திருநீற்றை உத்
தூளித்து ஒளிமிளிரும்
வெண்மையனே விட்டிடுதி கண்டாய்
மெய் அடியவர்கட்கு
அண்மையனே என்றும் சேயாய்
பிறர்க்கு அறிதற்கு அரிதாம்
பெண்மையனே தொன்மை ஆண்மையனே
அலிப் பெற்றியனே.





பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்கும் அன்பின்
வெற்று அடியேனை விடுதி கண்டாய்
விடிலோ கெடுவேன்
மற்று அடியேன் தன்னைத் தாங்குநர்
இல்லை என்வாழ்முதலே
உற்று அடியேன் மிகத் தேறி நின்றேன்
எனக்கு உள்ளவனே





உள்ளனவே நிற்க இல்லன

செய்யும்மையல் துழனி

வெள்ளன லேனை விடுதி கண்டாய்

வியன் மாத்தடக்கைப்

பொள்ளனல் வேழத்து உரியாய்

புலன் நின்கண் போதல் ஒட்டா தமுடி

மெள்ளனவே மொய்க்கும் நெய்க்குடம்

தன்னை எறும்பு எனவே





எறும்பிடை நாங்கூழ் எனப்புலனால்

அரிப்புண்டு அலந்த

வெறும் தமியேனைவிடுதி கண்டாய்

வெய்ய கூற்று ஒடுங்க

உறும் கடிப்போது அவையே உணர்வு

உற்றவர் உம்பர் உம்பர்

பெறும் பதமே அடியார் பெயராத

பெருமையனே





பெறுநீர் அறச் சிறுமீன் துவண்டு

ஆங்கு நினைப்பிரிந்த

வெருநீர் மையேனை விடுதி கண்டாய்

வியன்கங்கை பொங்கி

வருநீர் மடுவுள் மலைச்சிறு

தோணி வடிவின் வெள்ளைக்

குருநீர் மதிபொதியும் சடைக

வானக் கொழுமணியே





கொழுமணி ஏர்நகையார் கொங்கைக்
குன்றிடைச் சென்றுகுன்றி
விழும் அடியேனை விடுதிகண்டாய்
மெய்ம் முழுதுங்கம்பித்து
அழும் அடியாரிடை யார்த்துவைத்து
ஆட்கொண் டருளியென்னைக்
கழுமணியே இன்னுங் காட்டுகண்டாய்
நின் புலன்கழலே.

27





புலன்கள் திகைப்பிக்க யானுந்

திகைத்து இங்கொர் பொய்ந்நெறிக்கே

விலங்குகின்றேனை விடுதிகண்டாய்

விண்ணும் மண்ணும்எல்லாம்

கலங்க முந்நீர் நஞ்சமுது செய்தாய்

கருணாகரனே

துலங்குகின்றேன் அடியேன் உடையாய்

என் தொழுகுலமே.



குலங் களைந்தாய் களைந்தாய் என்னைக்
குற்றங்கொற்றச் சிலையாம்
விலங்கல் எந்தாய் விட்டிடுதிகண்டாய்
பொன்னின் மின்னுகொன்றை
அலங்கல் அந்தாமரை மேனி அப்பா
ஒப்பு இலாதவனே
மலங்கள் ஐந்தால் சுழல்வன் தயிரில்
பொரு மத்து உறவே.







மத்துறு தண்தயிரின் புலன்
தீக்கதுவக் கலங்கி
வித்துறுவேனை விடுதிகண்டாய்
வெண்தலை மிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து
குடர்நெடுமாலை சுற்றித்
தத்துறு நீறுடன் ஆரச்செஞ்
சாந்துஅணி சச்சையனே





சச்சையனே மிக்க தண்புனல்ம்பம்
விண்கால் நிலம்நெருப்பாம்
விச்சையனே விட்டிடுதிகண்டாய் Tovalica
வெளியாய் கரியாய்
பச்சையனே செய்ய மேனியனே ஸ்
ஒண்பட அரவக்
கச்சையனே கடந்தாய் தடம்
தாள அடற்கரியே





அடல் கரிபோல் ஐம்புலன்களுக்கு
அஞ்சி அழிந்த என்னை

விடற்கு அரியாய் விட்டிடுதி கண்டாய்
விழுத்தொண்டர்க்கு அல்லால்
தொடற்கு அரியாய் சுடர் மாமணியே
சுடு தீச்சுழலக்

கடல் கரிதுஆய் எழுநஞ்சு அமுது
ஆக்குங் கறைக்கண்டனே





கண்டது செய்து கருணைமட்டுப்
பருகிக் களித்து
மிண்டுகின்றேனை விடுதிகண்டாய்
நின்விரை மலர்த்தாள்
பண்டுதந்தாற் போல் பணித்துப்
பணிசெயக் கூவித்து என்னைக்
கொண்டு என்எந்தாய் களையாய்
களையாய குதுகுதுப்பே



குதுகுதுப்பின்றி நின்று என்குறிப்பே
செய்து நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண்டாய்
விரை யார்ந்து இனிய
மதுமதுப் போன்று என்னை வாழைப்
பழத்தின் மனங்கனிவித்து
எதிர்வது எப்போது பயில்விக்
கயிலைப் பரம்பரனே







பரம்பரனே நின்பழஅடி
யாரொடும் என்படிறு
விரும்பரனே விட்டிடுதி கண்டாய்
மென் முயல்கறையின்
அரும்பர நேர் வைத்து அணிந்தாய்
பிறவி ஐவாய் அரவம்
பொரும்பெருமான் வினையேன் மனம்
அஞ்சிப் பொதும்பு உறவே





பொதும்பு உறு தீப்போல் புகைந்தெரியப்
புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதி கண்டாய்
விரை யார் நறவம்
ததும்பும் மந்தாரத்தில் தாரம்
பயின்று மந்தம் முரல்வண்டு
அதும்பும் கொழுந்தேன் அவிர்சடை
வானத்து அடலரைசே





அரைசே அறியாச் சிறியேன்

பிழைக்கு அஞ்சல் என்னின்அல்லால்

விரைசேர் முடியாய் விடுதிகண்டாய்

வெண்நகைக் கருங்கண்

திரைசேர் மடந்தை மணந்த

திருப்பொற் பதப்புயங்கா

வரைசேர்ந்து அடர்ந்து என்ன வல்வினை

தான்வந்து அடர்வனவே





அடர்புலனால் நின் பிரிந்து அஞ்சி
அஞ்சொல் நல்லார்அவர்தம்
விடர் விடலேனை விடுதிகண்டாய்
விரிந்தே எரியும்
சுடர் அனையாய் சுடுகாட்டுஅரசே
தொழும்பர்க்கு அமுதே
தொடர்வு அரியாய் தமியேன்தனி
நீக்குந் தனித்துணையே





தனித்துணை நீநிற்க யான்தருக்கித்
தலையால் நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண்டாய்
வினை யேனுடைய
மனத்துணை யேஎன்தன் வாழ்முதலே
எனக்கு எய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்
துயர் ஆக்கையின் திண்வலையே





வலைத்தலை மானன்ன நோக்கியர்
நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்து அலைந்தேனை விடுதிகண்டாய்
வெண்மதியின் ஒற்றைக்
கலைத்தலையாய் கருணாகரனே
கயிலாயம் என்னும்
மலைத்தலைவா மலையாள் மணவாள
என் வாழ்முதலே.

40





முதலைச் செவ்வாய்ச்சியர் வேட்கை
வெந்நீரில் கடிப்பமூழ்கி
விதலைச் செய்வேனை விடுதிகண்டாய்
விடக்கு ஊன் மிடைந்த
சிதலைச் செய்காயம் பொறேன்
சிவனேமுறையோ முறையோ
திதலைச் செய்பூண்முலை மங்கைபங்கா
என் சிவகதியே





கதி அடியேற்கு உன் கழல்தந்து
அருளவும் ஊன்கழியா
விதி அடியேனை விடுதிகண்டாய்
வெண்தலை முழையிற்
பதிஉடை வாள்அரப் பார்த்து இறை
பைத்துச் சுருங்க அஞ்சி
மதிநெடு நீரிற் குளித்து ஒளிக்கும்
சடை மன்னவனே

42



மன்னவனே ஒன்றும் ஆறு அறியாச்
சிறியேன் மகிழ்ச்சி
மின்னவனே விட்டிடுதி கண்டாய்
மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவனே சொல்கழிந்தவனே
கழியாத் தொழும்பர்
முன்னவனே பின்னும் ஆனவனே
இம் முழுதையுமே







முழுது அயில் வேல்கண்ணியர் என்னும்
மூரித் தழல் முழுகும்
விழுது அனையேனை விடுதிகண்டாய்
நின்வெறி மலர்த்தாள்
தொழுது செல்வான் நல்தொழும்பரிற்
கூட்டிடு சோத்து எம்பிரான்
பழுது செய்வேனை விடேல் உடையாய்
உன்னைப் பாடுவனே.





பாடிற்றிலேன் பணியேன்மணி
நீ ஒளித்தாய்க்குப் பச்சூன்
வீடிற்றிலேனை விடுதிகண்டாய்
வியந்து ஆங்கு அலறித்
தேடிற்றிலேன் சிவன் எவ்விடத்தான்
எவர் கண்டனர் என்று
ஓடிற்றிலேன் கிடந்து உள்உருகேன்
நின்று உழைத்தனனே





உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத்து ஈயின்ஒப்பாய்
விழை தருவேனை விடுதிகண்டாய்
விடின் வேலை நஞ்சுஉண்
மழைதரு கண்டன் குணம் இலி
மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றுஎன்று
அறைவன் பழிப்பினையே





பழிப்பில்நின் பாதப் பழந்தொழும்பு
எய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண்டாய்
வெண்மணிப் பணிலம்
கொழித்து மந்தார மந்தாகினி
நுந்தும் பந்தப் பெருமை
தழிச்சிறை நீரில் பிறைக்கலம்
சேர்தரு தாரவனே





தாரகை போலும் தலைத்தலை
மாலைத் தழலரப்பூண்
வீரஎன் தன்னை விடுதிகண்டாய்
விடில் என்னை மிக்கார்
ஆர்அடியான் என்னின் உத்தர
கோசமங்கைக்கு அரசின்
சீர்அடியார் அடியான் என்று
நின்னைச் சிரிப்பிப்பனே





சிரிப்பிப்பின் சீறும் பிழைப்பைத்
தொழும்பையும் ஈசற்கு என்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண்டாய்
விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ்சு
ஊண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்
பிச்சன்என்று ஏசுவனே





ஏசினும் யான்உன்னை ஏத்தினும்
என்பிழைக்கே குழைந்து
வேசறு வேனை விடுதிகண்டாய்
செம்பவள வெற்பின்
தேசுடையாய் என்னை ஆளுடையாய்
சிற்றுயிர்க்கு இரங்கிக்
காய்சின ஆலம் உண்டாய் அமுது
உண்ணக் கடையவனே

50



ஸ்ரீ மாணிக்கவாசகர்